**குளியாப்பிட்டி பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 03 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 18 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குளியாப்பிட்டி பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) டெபே உழவு இயந்திரத்தின் ரூபா 1,625,000 தொகையான பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 பெப்ரவரி 08 ஆந் திகதி கிடைக்கப்பெற்ற உழவு இயந்திரத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 3,232,282 பெறுமதியான போட்டன் சிறிய ரக கெப் வண்டி ரூபா 3,200,000 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 50,662 தொகையான நிலுவை கேள்வித் தொகை கிடைக்க வேண்டிய வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 03 கணக்கு விடயங்களுக்குரிய கணக்குகளின் பிரகாரமான மீதிக்கும் அதற்கு நேரொத்த பட்டோலைகளின் மீதிக்கும் இடையே ரூபா ரூபா 1,528,276 தொகையான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

#### 1.3.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறவேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 185,516,718 ஆக இருந்ததுடன் அந்த தொகையிலிருந்து ரூபா

51,472,761 தொகை வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 39,260,810 ஆக இருந்ததுடன் அந்த தொகையிலிருந்து ரூபா 2,859,330 தொகை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாமல் காணப்பட்டது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) காணி மற்றும் கட்டிட பட்டோலையில் 299 காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி குறிப்பிடப்பட்ட போதிலும் நிலையான சொத்துப் பதிவேட்டில் உரித்துறுதியுடன் 174 காணிகள் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தமையால் 125 காணிகளுக்காக உரித்துறுதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 7,246,880 பெறுமதியான 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் பட்டோலைகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையின் காரணமாக அவற்றை திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 63,234,039 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 73,942,450 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 10,708,411 தொகையான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீண்டெழும் வருமானம் ரூபா 4,775,731 இனால் குறைவடைந்தமை மற்றும் மீண்டெழும் செலவினம் ரூபா 708,332 இனால் அதிகரித்தமை நிதி விளைவுகள் வீழ்ச்சியடைந்தமைக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 89 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியான வருமானம் ரூபா 158 மில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வருமானம் 51 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 185 மில்லியனாக இருந்தது.

#### 2.3.2 வீதவரியும் வரியும்

மீளாய்வாண்டிற்குரிய சிட்டையிடல்கள் ரூபா 1,882,263 ஆக இருந்ததுடன் அத்தொகையில் ரூபா 1,722,000 தொகை மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்தது. 2016 சனவரி 01

இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 581,000 தொகையான வீதவரியும் வரியும் நிலுவையில் ஆண்டின்போது ரூபா 227,000 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரியும் வரியும் மீதி ரூபா 476,361 ஆகும்.

### 2.3.3 ஏனைய வருமானம்

நிலுவையாக இருந்த ஏனைய வருமானத்தில் உள்ள ரூபா 172,135 தொகையான 03 மீதிகள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அந்தத் தொகையை அறவிடல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.

### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் என்பன முறையே ரூபா 23,769,359 ஆகவும் ரூபா 103,303,026 ஆகவும் இருந்தன.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

ரூபா 1,150,000 தொகையான 04 மூலதன செலவின விடயங்களுக்குரிய நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 06 செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 6,750,000 தொகையான நிதி ஏற்பாடுகளில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,174,019 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் செயல்முன்னேற்றம் 01 சதவீதம் முதல் 63 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இலக்கம் டீடீ 80 என்ற வீதிச் செப்பனிடுகை இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்காக ரூபா 1,278,299 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் 2016 மே 31 ஆந் திகதி முகவர் நிறுவகத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், இயந்திரத்தை பழுதுபார்த்து மீளக் கையளிக்க வேண்டிய திகதி தொடர்பாக இருதரப்பினர்களுக்கிடையே இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. பழுதுபார்க்கப்பட்டதன் பின் 2017 சனவரி 17 ஆந் திகதி சபைக்குக் கிடைத்திருந்த இயந்திரம் தொழில்நுட்பக் கோளாரின் காரணமாக 2017 பெப்ரவரி மாதத்தின் போது மீண்டும் பழுதுபார்த்தலுக்காக முன்னர் கூறப்பட்ட நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது.

(ஆ) கொடகம சமூக அடிப்படை அமைப்பின் கீழான செயற்திட்டத்தில் நீர்த் தாங்கி நிர்மாணிக்கப்பட்டு செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக சபையினால் மேற்பார்வையொன்று மேற்கொண்டு உரிய செயற்திட்டத்தை செயற்பாடுள்ளதாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு செயற்திறன்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக தேவையான வடிகாண் மூடிகளைக் கொள்வனவு செய்வதற்காக 2015 ஆம் ஆண்டில் சபையினால் பெறப்பட்டிருந்த கூறு விலைகளிலிருந்து வழங்குனரைத் தெரிவு செய்யும் பெறுகைகள் குழுவின் மூலம் மேற்கொள்வதற்கு பதிலாக முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்தின்

அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 626,930 செலவில் மேற்கொள்ளப்பட்டிருந்த வடிகாண் மூடிகளின் கொள்வனவுகளும் 2015 இன் கூறுவிலையை அடிப்படையாகக் கொண்டு பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 5,870,539 கூட்டுத்தொகையான கருங்கல் உற்பத்தி இருப்பொன்று சபையினால் ஆண்டின்போது இரண்டு வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இதன் போது பெறுகைகள் செயற்பாடுகளுக்குப் புறம்பாக 2013 இன் கூறுவிலை கோரலின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நீர் செயற்திட்டத்திற்காக 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 76,212 தொகையான நீர் உபகரண இருப்பு 06 வருடங்கள் அளவிலான காலமாக சபையின் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்படுவதுடன் உரிய நீர் செயற்திட்டத்தின் நிர்மாணங்களும் கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) 2013 யூலை 26 ஆந் திகதி நன்கொடையாகக் கிடைத்த 10'x10' அளவான 1.5 அங்குல GI குழாயுடன் றெஸ்லின் துணியைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டிருந்த 11 நடமாடும் பல்நோக்குக் கூடாரங்கள் றெஸ்லின் துணி கிழிந்ததன் காரணமாக அந்த கூடாரங்கள் பயன்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தது.

(இ) 216 சோக்கெய்ல் மற்றும் தண்ணீர் பவுசருக்காக பயன்படுத்தப்பட்ட 2 தண்ணீர் பம்பிகள் என்பன களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டம்

மோட்டார் வாகனமும் வண்டியும் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 224,974 பெறுமதியான 08 கழிவுப்பொருள் வண்டிகளில் 06 வண்டிகள் பௌதீகரீதியில் காணப்படவில்லை.

### 3.6 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 1,000,000 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் புனரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த கித்தலவ நூலகக் கட்டிடத்தில் சீமெந்துக் கட்டு 8 அடி நீளத்தில் அளவில் வெடித்திருந்தமை மற்றும் கட்டிடத்தைச் சுற்றியுள்ள படிக்கட்டுக்கள் 3 இடங்களில் வெடித்திருந்ததன் அடிப்படையில் உரிய வேலைகள் குறித்த நியமத்தில் மேற்கொள்ளப்படாதிருந்த நிலைமையொன்று வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) கட்டுக்களில் இருதடவை பொலிஸ் அடிப்பதற்காக ரூபா 37,657 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், பௌதீக பரிசோதனையின் பிரகாரம் பூர்த்திசெய்யப்பட்டவைகள் தரமான பிரகாரம் காணப்படவில்லை.

### 3.7 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

கழிவுகளை முறையான பிரகாரம் அகற்றுவதற்காக சரியான திட்டமொன்று காணப்படாமையினால் அலஹிட்டியாவத்த என்ற பெயருடைய காணியில் கழிவுப்பொருட்கள் அகற்றப்பட்டிருந்தது. எனினும், 2016 திசெம்பர் மாதம் வரையில் உயிரியல் வாயு

அலகொன்று நிர்மாணிக்கப்பட்டு சபை நாளாந்தம் சேகரிக்கின்ற கழிவுகளை உயிரியல் வாயு அலகிற்குள் போடுவதன் மூலம் உற்பத்தியாகின்ற மீதென் வாயுவை எதிர்காலத்தில் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**04. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | நிலையான சொத்துக்களின் பெறுமதி பிழையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமை மற்றும் நிலுவை வருமானம் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டமை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் | காணிக்காக உரித்துறுதி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (இ) | நடைமுறைச் சொத்துக்கள் | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட இருப்புக்கள் காணப்பட்டமை. |
| (ஈ) | பெறவேண்டிய கணக்குகள் | நிலுவையாக இருந்த ஏனைய வருமானங்களுக்காக சான்றுகள் காணப்படாமை |
| (உ) | கொள்வனவு | பெறுகைகள் நடைமுறை பின்பற்றப்படாமை |
| (ஊ) | ஒப்பந்த நிர்வாகம் | நீர் செயற்திட்டத்திற்காக சரியான மேற்பார்வை மேற்கொள்ளப்படாமை. கட்டிடங்கள் புனரமைக்கும் போது குறைபாடுகள் காணப்பட்டமை. |